பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 07 | ஞாயிற்றுக்கிழமை | 22.12.2024 | அதிர்வு 142

## வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகின்றதா அரசு?

### தமிழரசுக் கட்சி சந்தேகம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதில் 05



# அநுர தலைமையில் சரியான திசையில் பயணிக்கின்றது நாடு

## பிரிட்டன் தூதுவர் பாராட்டு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நாடு சரியான பொருளாதாரத் திசையில் சென்று கொண்டிருக்கின்றது என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பற்றிக் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் வர்த்தக வாய்ப்புக்களை ஆராய்வதற்காக பிரிட்டன் வணிகத் தலைவர்கள் குழு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது என்றும் அவர் கூறினார்.

நிதி அமைச்சில் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவுக்கும் பிரிட்டன் தூதுவருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 05

# மக்களின் காணிகளில் இருந்து உடன் வெளியேற வேண்டும் அரச படைகள்

## பிரதமரிடம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை

பிரதமர் ஹறிணி அமரசூரியவை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் சந்தித்துப் பேசினார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தலைமன்னார் பகுதியில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகளில் இருந்தும், பொது இடங்கள், 05






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து தாம் விலகுகின்றார் எனத் தெரிவித்து மாவை சேனாதிராஜா அனுப்பிய கடிதத்தை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானத்திற்கும் வாக்கெடுப்புக்குமாக கட்சியின் மத்திய குழு வரும் ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் திகதி வவுனியாவில் கூடவிருக்கையில், அந்தப் பதவியை 10 ஆண்டுகள் கடந்தும் தொடர்ந்தும் தம்முடன் தக்க வைக்கும் கடைசி நேர முயற்சிகளை மாவை சேனாதிராஜாவின் தரப்பு முன்னெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

அந்தத் தரப்பில் அவரோடு நிற்கும் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி, மத்திய குழு உறுப்பினர்களை தொடர்பு கொண்டு மாவைக்கு ஆதரவு திரட்டி வருகிறார் எனவும் தெரியவந்தது.

இதற்கிடையில் தமது தலைமையைத் தக்க வைப்பதற்கான கடைசிக் கட்ட எத்தனங்களில் ஒன்றாக கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் மாவை சேனாதிராஜா மற்றும் 05



# கனடாவில் மக்கள் சந்திப்பில் சிறீதரன் எம்.பி.



கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஒட்டோவா நகரில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.







# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47,599 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, மேல் மாகாணத்தில் 20,519 பேர் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12,030 டெங்கு நோயாளரகள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், இந்தவருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.










# சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை சந்தித்தார் குயின் போயோங்

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கும் சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக் குழுவின் துணைத் தலைவி குயின் போயோங் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற ஒத்துழைப்பு, நிலைபேறான அபிவிருத்தி, வர்த்தகம், விவசாயம், தொழில்கள் மற்றும் பலதரப்பு ஈடுபாடுகள் போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.


இலங்கையின் புதிய அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நோக்கங்களை அடைவதில் சீனாவின் உறுதிப்பாட்டுடன் உள்ளதாக குயின் போயோங் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரஸ்பர அபிவிருத்தி மற்றும் செழிப்பை மேம்படுத்துவதற்கு முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் சீனாவின் தயார் நிலையையும் குயின் போயோங் வலியுறுத்தியுள்ளார்.













# வீதியோரம் கொட்டப்பட்ட குளிர்பானப் போத்தல்கள்

காலாவதியான ஆயிரக் கணக்கான குளிர்பான போத்தல்கள் வீதியோரங்களில் கொட்டப்பட்டுள்ளன.

யாழ். புலோலி – கொடிகாமம் வீதியில் இருந்து துன்னாலை ஸ்ரீவல்லிபுராழ்வார் ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் ஆயிரக் கணக்கான குளிர்பானப் போத்தல்கள் வீசப்பட்டுள்ளன.

இப் பகுதியில் பருத்தித்துறை பிரதேச சபையினரின் கழிவுகள் கொட்டப்படும் பகுதி உள்ளது. இப் பகுதியில் தனியார் பலரும் கழிவுகளை பாதுகாப்பற்ற முறையில் கொட்டி வருகின்றனர்.

இந்தப் பகுதியை அண்மித்தே வீதியோரமாக காலாவதியான ஆயிரக் கணக்கான குளிர்பானப் போத்தல்கள் கொட்டப்பட்டுள்ளன.

இப் பகுதியில் வீதியோரமாக பாதுகாப்பற்ற முறையில் தனியார் பலரும் கழுவுகளைக் கொட்டுவதானால் இவ் வீதியால் பயணிக்க முடியாதவாறு துர்நாற்றம் வீசி வருவதுடன், டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் அபாயகரமான இடமாகவும் காணப்படுகிறது.





# பரிசோதனைக்காக கால்நடைகளில் இருந்து இரத்த மாதிரி பெறும் நடவடிக்கை நிறைவு

பரிசோதனைக்காக கால்நடைகளில் இருந்து இரத்த மாதிரிகள் பெறும் முதலாம் கட்ட நடவடிக்கை நேற்றுடன் நிறைவடைந்தது.

எலிக்காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி மற்றும் சாவகச்சேரி பகுதியில் அண்மை நாள்களாக பலர் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து இப்பகுதியில் உள்ள கால் நடைகளினால் லிட்ரோ பைரசியஸ் வைரஸ் தொற்றியிருக்கலாம் என்பதைக் கண்டறிய விலங்குப் புலனாய்வு அதிகாரிகளால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், நேற்று மருதங்கேணி கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்ப்பட்ட மணற்காடு, குடத்தனை, அம்பன் பகுதிகளில் விலங்குகளில் இருந்து இரத்த மாதிரி பெறும் நடவடிக்கை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் விலங்குப் புலனாய்வு அதிகாரி வைத்தியர் அமுதா பிரபாகரன் தலைமையிலான குழுவினரும் கிளிநொச்சி விலங்குப் புலனாய்வு அதிகாரி ரேணுகா கௌரிதிலகன் தலைமையிலான குழுவினரும் 400 வரையான விலங்குகளின் இரத்த மாதிரிகளை சேகரித்துள்ளனர்.

கடந்த புதன் கிழமை பெரதேனியாவில் இருந்து விலங்கு தொற்றுநோயியல்ப் பிரிவினர் வருகை தந்து எலிக் காய்ச்சலினால் உயிரிழந்தவர்களின் வீடுகள் அதனை அண்மித்த பகுதிகளில் நேரடியாக பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஆடு மற்றும் மாடுகள், பன்றி போன்ற விலங்குகளில் இருந்து இரத்த மாதிரிகள் கடந்த மூன்று நாள்களாக விலங்குப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்டுள்ளன.

விலங்குகளில் இருந்து பெறப்பட்ட 400 வரையான இரத்த மாதிரிகளும் பெரதேனியாவில் அமைந்துள்ள விலங்கு நோயியல் தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்த வகையில் நேற்றுடன் இரத்த மாதிரிகள் பெறும் முதலாம் கட்ட நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதாகவும் இதன் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கை தொடருமெனவும் விலங்குப் புலனாய்வு அதிகாரி வைத்தியர் அமுதா பிரபாகரன் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார் எனவும் அறிய வந்தது.

மாவை சேனாதிராஜாவின் ராஜினாமாக் கடிதம் தொடர்பில் விளக்கம், விவரம் கேட்டும், பின்னர் அந்த ராஜினாமா ஏற்கப்படுவதாகத் தெரிவித்தும், பதிவுத்தபாலில் செயலாளர் கடிதங்கள், அறிவுறுத்தல்கள் அனுப்பிய போது, அவற்றுக்குச் சரியான முறையில் பதில் அனுப்பத் தவறிய மாவை சேனாதிராஜா இப்போது தமது பதவி துறப்பு நிச்சயம் என்றதும் அடுத்தடுத்து கடிதங்களை அனுப்புகிறார்.

பிந்திய கடிதத்தில் அவர் குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் குறித்து அறிய வந்தது.

ஒன்று - சிறிதரனைத் தம்மிடமிருந்து தலைமை பதவியை ஏற்கும்படி கேட்டே தான் பதவி விலக முன் வந்தார் என்றும், சிறிதரன் தலைமைப் பதவியை ஏற்காத பட்சத்தில் தான் தலைவர் பதவியில் தொடர்வதுதான் முறையானது என்றும் அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

அடுத்தது - தான் பதவி விலகுவது பற்றிய கடிதம் அனுப்பிய பின்னரும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன தயாரிப்பைத் தாமே முன்னின்று நடத்தினார் என்றும், தம் முன்னிலையிலேயே அது வெளியிடப்பட்டது என்றும், ஆகையினால் அச்சமயத்திலும் இப்போதும் தாமே கட்சியின் தலைவராகத் தொடர்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா இருந்த போது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களை கட்சியின் முன்னாள் தலைவர் சம்பந்தன் தயாரித்த சந்தர்ப்பங்கள் பல உண்டு. ஆக, தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் பொறுப்பு அல்லது செயற்பாட்டில் தான் ஈடுபட்டார் என்பதற்காகத் தாமே கட்சி தலைவர் என்று மாவை சேனாதிராஜா கூறுவது அர்த்தமற்றது. அபத்தமானது.

கட்சியின் பிறிதொரு தலைவர் மாவையின் குடும்பமே இந்த ராஜினாமா கடிதத்தில் மூழ்கியதுதான் என்று நேற்றுக் குறிப்பிட்டார்.

எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏதென்று விசாரித்தேன்.

மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் கட்சியின் மத்திய குழுவில் இருந்து தாம் ராஜினாமாச் செய்கிறார் என முன்னர் செயலாளருக்குக் கடிதம் அனுப்பினார். சற்று காலம் கழித்துத் தான் கட்சியின் மத்திய குழுவில் தொடர்ந்து இருக்கிறாரா என்று கேட்டு விசாரித்து ஒரு கடிதம் செயலாளருக்கு அனுப்பினார் என்றும், அதை அடுத்து அவர் இப்போது மத்திய குழுவுக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றார் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவை சேனாதிராஜாவும் தமது கடந்த கால தலைமைப் பதவியில் இவ்வாறு கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு, தொடர்ந்தும் பதவியில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக, ராஜினாமா கடிதங்களை அனுப்புவதும் பின்னர் அவற்றை தூக்கிப் போட்டு விட்டு பதவியில் தொடர்வதும் அவர்களுக்கு குடும்ப ரீதியான போக்கு தான் போலும்.

-----------------------------

## வாக்குறுதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசு பின்வாங்குவது போல் தென்படுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நோர்வே நாட்டுத் தூதுவர் மே-எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்ரெனருக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் புதிய அரசு ஆட்சிபீடமேறியிருக்கும் நிலையில், அவர்களால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவ்வாறு அணுகப்படுகின்றன? ஏதேனும் முன்னேற்றகரமான நகர்வுகள் இடம்பெற்றிருக்கின்றனவா? என நோர்வே தூதுவர் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதிநிதிகள், ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டதைப் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகள் முழுமையாக விடுவிக்கப் படவில்லை எனவும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் இன்னமும் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியதுடன், இருப்பினும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என அரசு வாக்குறுதி அளித்திருப்பதாகத் தெரிவித்தனர்.

அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துதல் என்பன தொடர்பில் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து தற்போது அரசு பின்வாங்குவது போல் தென்படுவதாகவும், அவற்றுக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அரசு தாமதப்படுத்துவதாகவும் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்ரெனரிடம் எடுத்துரைத்தனர்.

இருப்பினும், புதிய அரசு ஆட்சிப்பீடமேறி சில வாரங்களே கடந்திருப்பதனால், அவர்களது நடவடிக்கைகள் தொடர்பில் உடனடியாக ஒரு மதிப்பீட்டுக்கு வருவது கடினம் என மே-எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக் காட்டிய அவர்கள், எனவே அவர்களது நகர்வுகள் குறித்து தொடர்ந்து அவதானம் செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்டனர்.

## அநுர தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பில் பிரிட்டன் தூதுவர், தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாடினார்.

அரசு ஆட்சியைப் பொறுப்பேற்றதிலிருந்து பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதில் மேற்கொண்ட விரைவான முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார்.

இலங்கையின் பொருளாதாரத் திட்டங்கள் குறித்தும், எதிர்கால முன்னெடுப்புக்கள் குறித்தும் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தெளிவுபடுத்தினார்.

இலங்கைப் பொருட்களின் ஏற்றுமதியை, குறிப்பாக சேதன விவசாயப் பொருள்கள், ஆடைகள், இயற்கை அழகு சாதனப் பொருள்களைப் பிரிட்டன் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதை அதிகரிப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதாகத் தூதுவர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன், சர்வதேச இறையாண்மை கடன் பத்திரங்களை மறுசீரமைப்பதில் இலங்கையின் முயற்சிகளையும், சர்வதேச நாணய நிதியத் திட்டத்தை திறம்பட செயற்படுத்துவதையும் தூதுவர் வெகுவாகப் பாராட்டினார்.

-----------------------------

## மக்களின் காணிகளில்...

(முதலாம் ப்க்கத் தொடர்ச்சி..)

ஆலயங்களுக்குச் சொந்தமான காணிகளில் இருந்தும் அரச படைகள் வெளியேறி மக்களது பாவனைக்காக வழங்க வேண்டும் என்று இதன்போது செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

மேலும், ஐயப்பன் பக்தர்கள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு யாத்திரையாகப் பயணிப்பதற்கான விமானப் பயணக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., விமானப் பயணக் கட்டணத்தைக் குறைக்குமாறும் கோரினார்.

அத்துடன் கடவுச்சீட்டைப் பெறுவதற்காகப் பக்தர்கள் தமது பயணத்தின் நிமித்தம் கொழும்பு நகருக்கு பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வந்து, இந்து கலாசார அமைச்சிடம் கையெழுத்துப் பெற்ற பின்னரே, கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. அதைத் தளர்த்த வேண்டும் என்றும், விமானக் கட்டணத்தை ஒரு நிர்ணய விலையில் சீராகப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதமரிடம் அவர் கோரினார்.

மேலும், இந்தச் சந்திப்பில் தலைமன்னாரில் இருந்து மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப் பிரதிநிதிகள் சிலரும், ஐயப்பன் பக்தர்கள் சிலரும் இணைந்திருந்தனர்.


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING

KDH
FOR
VAN RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230





# வடக்கில் இன்னும் ஒரு மாதத்துக்குள் அரிசி விலை நிச்சயம் குறைவடையும்

## பிரதான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள் அரிசியின் விலை நிச்சயம் குறைவடையும் என வடக்கு மாகாணத்திலுள்ள பிரதான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே, வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும் பகுதியைக் கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் என அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் ஆளுநர் நா.வேதநாயகன் இருவரும் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இருவரதும் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பு நடைபெற்றது.

ஆரம்பத்தில் கருத்து வெளியிட்ட ஆளுநர், அரிசியின் விலையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பால் ஏழைகள் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டதுடன், அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்யக் கூடிய நிலைமை இல்லாதிருப்பதற்கான காரணத்தைக் கேட்டறிந்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல், அவற்றின் "லேபல்கள்" மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் இ.சந்திரசேகர், அரிசியை வைத்துக்கொண்டு தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டமை எல்லோருக்கும் தெரியும் எனவும், அவ்வாறான நிலைமை தொடரக்கூடாது என்பதில் அரசு கவனத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அரிசி ஆலை உரிமையாளர்களான உங்களை நட்டத்தில் வீழ்த்துவதையோ, மக்களைக் கஷ்டத்தில் வீழ்த்துவதையோ விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரசு எதிர்காலத்தில் 3 இடங்களில் புதிதாக அரிசி ஆலையை அமைப்பதற்குத் திட்டமிடுவதாகவும் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் நெல்லைக் கொள்வனவு செய்தபோது நீங்கள் அதை அரிசியாக்கும்போது நிர்ணயமாகும் விலையைவிட தற்போது அதிக விலைக்கே விற்பனை செய்வதாகவும் தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களை பழிவாங்குவதாக நினைக்க வேண்டாம் என்றும், அதிகமான ஏழைகள் வாழும் மாகாணம் எமது மாகாணம் என்பதைக் கவனத்தில் எடுத்து சமூகப் பொறுப்புடன் செயற்படுமாறும் அமைச்சர் இ.சந்திரசேகர் வலியுறுத்தினார்.

இங்கு கருத்து வெளியிட்ட மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், வடக்கு மாகாணத்தின் தேவையை விட இரண்டரை மடங்கு அதிக நெல் உற்பத்தி செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், "வடக்கு மாகாண விவசாயிகளின் நெல்லை வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பியர் உற்பத்திக்கும் கொள்வனவு செய்கின்றார்கள். அத்துடன் இங்கிருந்து அவர்கள் நெல்லைக் கொள்வனவு செய்துகொண்டு சென்று திருப்பி எங்களுக்கு அதிக விலைக்கு வழங்குகின்றனர். எங்களுக்கு வங்கிகள் ஊடாக அதிகளவான கடன் வசதிகள் கிடைப்பதில்லை. ஆனால், அவர்களுக்குக் கிடைக்கின்றது. இங்கு போதியளவு களஞ்சிய வசதிகள் இருக்கும் நிலையில், வங்கிகள் கடன் எல்லையை அதிகரித்து வழங்கினால் எம்மால் விவசாயிகளிடமிருந்து அதிகளவு நெல்லைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும்." – என்று குறிப்பிட்டனர்.

மேலும், நெல் அறுவடைக்கு முன்னராகவே நெல்லுக்கான மற்றும் அரிசிக்கான விலையை நிர்ணயம் செய்வதன் ஊடாக இவ்வாறான நெருக்கடி நிலைமையைத் தவிர்க்க முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நெல் மற்றும் அரிசி விலை நிர்ணயம் தொடர்பில் துறைசார் அமைச்சருடன் கலந்துரையாடுவதாக அமைச்சர் குறிப்பிட்டதுடன் வங்கிகளுடன் கலந்துரையாடுவதாக ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் ஏற்கனவே ஆலைகளின் இருப்பிலுள்ள அரிசிகள் தற்போதைய நிலைமைக்குப் போதுமானளவில் இருப்பதாகவும், விலை அதிகரிப்பு இனி இருக்காது எனவும் குறிப்பிட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், இன்னும் ஒரு மாதத்தில் அரிசியின் விலை 200 ரூபாவை விட நிச்சயம் குறைவடையும் எனக் குறிப்பிட்டனர்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலராகப் பதில் கடமையாற்றும் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம், கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகனன், வவுனியா மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் திரேஸ்குமார், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ந.திருலிங்கநாதன், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி எஸ்.குகதாஸ், நெல் கொள்வனவு சபையினர், நுகர்வோர் அதிகார சபையினர் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம்

## நாமல் தெரிவிப்பு



"உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம். 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தான் எமது ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டது. கட்சியை பலப்படுத்தும் செயற்பாடுகளுக்காக விசேட குழு ஒன்றை நியமித்துள்ளோம்."

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடன் நேற்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


"கட்சியை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளோம். மறுசீரமைப்புகளுக்காக விசேட குழு ஒன்றை நியமித்துள்ளோம். நாடளாவிய ரீதியில் தொகுதி அமைப்பாளர் கூட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளையும் எதிர்க்கும் எதிர்க்கட்சியாக செயற்படப் போவதில்லை. நாட்டு மக்களின் நலனுக்காக எடுக்கப்படும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் நடத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெற்றியோடு எமது ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டது. 2029ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக நாங்கள் மீண்டும் எழுச்சி பெறுவோம்."– என்றார்.

# இன்று டில்லிக்கு செல்கிறார் முன்னாள் ஜனாதிபதி ரணில்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று ஞாயிற்றுக் கிழமை மீண்டும் இந்தியா செல்லவுள்ளார்.

இவ்வாண்டில் ஒரு மாத கால இடைவெளிக்குள் இரண்டாவது தனிப்பட்ட விஜயமாக இன்று அவர் டில்லி செல்லவுள்ளார். இந்த விஜயத்தின் போது பல்வேறு முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

குறிப்பாக இவ்விஜயத்தின் போது எதிர்வரும் 27ஆம் திகதி இந்தியாவின் மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவேந்தல் உரையை ஆற்றவுள்ளார். இந் நிகழ்வு டில்லியிலுள்ள இந்திய ஹாபிடேட் சென்டர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஒரு வார இந்திய விஜயத்தின் போது, அந்நாட்டு புராதன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடவுள்ளார். அது மாத்திரமின்றி முக்கிய இரகசிய அரசியல் சந்திப்புக் களிலும் அவர் ஈடுபடவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் வாகன இறக்குமதி

சுமார் மூன்று ஆண்டுகளின் பின்னர் வெளிநாடுகளில் இருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ள போதிலும், இறக்குமதியாகக்கூடிய வாகனங்களின் விலைகள் கட்டுமட்டில்லாத அளவு உயர்வாக இருக்கும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

முன்னர் கடைசியாக வாகனங்கள் இறக்குமதியான காலத்தில் அவற்றுக்கு இருந்த விலையைப் போல மூன்று மடங்கு விலையிலேயே புதிய வாகனங்களை இறக்குமதி செய்து பயன்படுத்த முடியும் என்று இப்போது சுட்டிக் காட்டப்படுகின்றது.

கடைசியாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்ட காலத்தில் இருந்த டொலரின் பெறுமதிக்கு எதிரான ரூபாயின் மதிப்பு இப்போது மோசமாக விழுந்து விட்டிருப்பதால் இந்த விலை அதிகரிப்பு என்று சுட்டப்படுகின்றது.

அதேசமயம் வாகன இறக்குமதிக்கு அளிக்கப்படும் அனுமதி எல்லை மீறி அந்நிய செலாவணி கையிருப்பை வற்றச் செய்து விடக் கூடாது என்ற பின்புலத்தில், வாகன இறக்குமதியை கட்டுப்படுத்தும் விதத்திலான வரி விதிப்புகளையும் அரசு முன்னெடுக்கும் என்று கருதப்படுகின்றது.

இவையெல்லாம் ஒன்று சேர்ந்து இறக்குமதியாகக் கூடிய புதிய வாகனங்களின் விலையை எக்கச்சக்கமாக எகிற வைத்து விடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் வீழ்ச்சி காரணமாக இலங்கை ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் விலைகள் மூன்று மடங்கால் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதியாக 2020ஆம் ஆண்டு இலங்கைக்குப் புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அத்தருணத்தில் டொலரின் பெறுமதி குறைவாக இருந்தது. தற்போதைய பெறுமதியின் பிரகாரம் இந்த மும்மடங்கு அதிகரிப்பு இடம்பெற வாய்ப்பிருப்பதாக வாகன இறக்குமதியாளர்கள் கூறியுள்ளனர்.

ஜப்பானில் டொயோட்டா நிறுவனம் தயாரிக்கும் பஸ் ஒன்றை 2020ஆம் ஆண்டு 70 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முடிந்திருந்த போதிலும் தற்போது அதனை 2 கோடி ரூபாவுக்குக் குறையாத விலையிலேயே விற்பனை செய்ய முடியும் எனவும் வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து, சுற்றுலா போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு மாத்திரமே அமைச்சரவை அங்கீகாரத்தை தற்போது வழங்கியுள்ளது.

வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கும் அறிவித்தலை வாபஸ் பெறும் வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் வெளியிடப்பட்டு விட்டது.

ஆயினும், தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த ஆண்டு ஜனவரி மாத நடுப்பகுதியில்தான் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அனுமதி கிடைத்தவுடன் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்றும் இறக்குமதியாளர்கள் கூறியுள்ளனர்.

வாகன இறக்குமதி மீண்டும் அடுத்த ஆண்டில் ஆரம்பமானாலும் கூட, எடுத்த எடுப்பில் பெரும் எண்ணிக்கையில் சொகுசு வாகனங்கள் இறக்குமதியாவதற்கான வாய்ப்புகள் குறைவு என வாகன இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.

விலை குறைந்த - மக்கள் பாவனைக்கு அதிக அளவில் தேவைப்படும் - மோட்டார் வாகன ரகங்களே முதல் கட்டத்தில் முக்கிய இடம் கொடுத்து இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# பண்டிகைக் கால தற்காலிக வியாபார நிலையங்கள் ஊடாக மன்னார் நகரசபைக்கு 3 கோடி ரூபாவுக்கும் மேல் வருமானம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர சபையின் ஊடாக பண்டிகைக் கால வியாபார நிலையங்கள் பகிரங்க குத்தகைக்கு விடப்பட்ட நிலையில் அதன் ஊடாக மன்னார் நகரசபைக்கு 3 கோடியே 20 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்க பெற்றுள்ளதாக மன்னார் நகர சபை அறிவித்துள்ளது.

மன்னார் நகரசபையின் பண்டிகைக் கால வியாபார நிலையங்களை ஏல விற்பனை மூலமாக 10 நாள்களுக்கு குத்தகைக்கு விடும் செயல்பாடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் இடம் பெற்றது. 300 கடைகள் ஏல விற்பனை மூலம் வழங்கப்பட்ட நிலையில் மன்னார் நகரசபைக்கு 3 கோடியே இருபது லட்சம் ரூபா வருமானம் பெறப்பட்டது. மேலதிகமாக 16 கடைகளுக்கான ஏல விற்பனையும் இடம் பெற்றது.

கடந்த வருடம் பண்டிகை கால வியாபார நடவடிக்கைகளின் போது 320 கடைகள் பகிரங்க ஏல விற்பனை ஊடாக 2 கோடியே 21 லட்சத்துக்கு வழங்கப்பட்ட நிலையில் இம்முறை 1 கோடி ரூபாய் மேலதிக வருமானம் கிடைக்க பெற்றுள்ளது.

இந்த வருமானத்தின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான மன்னார் நகர சபையின் வரவு செலவு திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் மக்கள் பங்களிப்புடன் வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வட்டவளை சிங்களப் பாடசாலைப் பகுதியில் சிறுத்தைப் பூனையின் நடமாட்டத்தால் பீதி!

வட்டவளை சிங்களப் பாடசாலைப் பகுதியில் சிறுத்தைப் பூனையின் நடமாட்டம் இருப்பதைக் கண்டு அப்பகுதியில் உள்ள மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

இது குறித்து நல்லதண்ணி வனத் துறை அதிகாரி ரத்நாயக்க மற்றும் அவரது குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அங்கு பார்வை இட்டனர். அப் பகுதியில் உள்ள அனைத்து மக்களுடனும் பேசினர்.

மக்களை பீதி அடைய வேண்டாம் எனக் கூறிய அவர், இங்கு உள்ளது புலி இல்லை, சிறிய ரக பூனைச் சிறுத்தை என்றார்.. இதனால் மக்களுக்கு தீங்கு இல்லை. இருந்த போதிலும் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுத்து உள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.



மேலும் வனத் துறை அதிகாரிகள் வீடுகளுக்குச் சென்று தெளிவூட்டலும் வழங்கினர்.

அவ் இடத்தில் மூன்று பூனை சிறுத்தை (ஹந்துன் திவ்யா) உள்ளன. தாய் மற்றும் இரண்டு குட்டிகள். அவற்றை அங்கு இருந்து அகற்றி வேறு வனப் பகுதிக்குக் கொண்டு செல்ல தாங்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர் என ரத்நாயக்க தெரிவித்தார்.



# கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று ஓமந்தை பொலிஸாரால் முற்றுகை

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் பல காலமாக சூட்சுமமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

வவுனியா ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சேமமடு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தி



நிலையத்தை நடத்தி வந்த அதே பகுதியை சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 150,000 மில்லிலீற்றர் கோடா மற்றும் 150,000 மில்லிலீற்றர் வடி ஆகியன மீட்கப்பட்டன்ச். சுமார் ரூபா ஒரு லட்சம் பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியமையை அடுத்து அவரை எதிர்வரும் 30ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை, பல இளைஞர்கள் இந்தப் பகுதியில் கசிப்பை அருந்திவிட்டு அப்பிரதேசத்தில் அசம்பாவிதங்களில் ஈடுபடுவதுடன் கடந்த காலங்களில் அப்பகுதியில் உள்ள நீரேந்து பிரதேசங்களிற்கு நீராட சென்று உயிரிழந்தும் உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உயிரிழந்த நிலையில் செம்மணியில் முதலை!

யாழ் செம்மணி பகுதியில் இறந்த நிலையில் முதலை ஒன்று நேற்றுக் காணப்பட்டது..

யாழ் வளைவுக்கு மிக அன்மையில் அமைந்துள்ள செம்மணி வீதியில் நேற்றுக் காலை முதல் இறந்த நிலையில் முதலை காணப்பட்டது.

முதலை அருகில் உள்ள நீர் வெளியேறும் மதகிலிருந்து வீதிக்கு வந்த போது வீதியால் பயணித்த வாகனத்தின் சில்லுக்குள் அகப்பட்டு அது உயிரிந்திருக்காம் என கருதப்படுகின்றது.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மன்னாரில் நேற்று மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு





(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதி நிதிகள் நேற்றைய தினம் சனிக்கிழமை மதியம் மன்னாரிற்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டனர். மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவ னத்தில் சிவில் சமூக செயற் பாட்டாளர் களுடன் அவர்கள் விசேட சந்திப்பில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப் பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் சிவில் சமூக செயற்பாட்டளர்கள் ஒன்றி ணைக்கப்பட்டு, மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அப கரிப்பு, படையினர் வசம் காணப்படும் மக்களின் காணிகள் விடுவிக்கப் படாமை, காற்றாலை மற்றும் கனிய மண் அகழ்வினால் மன்னார் தீவில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் கேட்ட றிந்து கொண்டனர்.

மேலும் மன்னாரில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவல கத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள தோடு, அவற்றை நிவர்த்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பொலிஸாரின் தடுப்பில் வைக்கப் படும் சந்தேக நபர்களை நேரடியாக சென்று சந்திக்க கூடிய செயற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக்கலந்துரையாடலைதொடர்ந்து மன்னார் மாவட்ட சமூக பொருளா தார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலை மையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதி நிதிகள் முள் ளிக்குளம் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது முள்ளிக்குளம் பகுதி யில் பல வருடங்களாக மக்களின் காணிகளில் கடற்படையினர் நிலை கொண்டுள்ளமை குறித்து ஆராய்ந்த னர். யுத்தம் முடிவடைந்து இன்று 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் கடற்படையினர் மக்களின் அந்தக் காணிகளை விடுவிக்காமை குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதி நிதிகள் நேரடியாக ஆராய்ந்துள்ளனர்.

மேலும் முள்ளிக்குளம் மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினை கள்,அவர்கள் முகம் கொடுத்து வருகின்ற சவால்கள்,முள்ளிக்குளம் ஆலயத்திற்கு மக்கள் சென்று வருவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர்.

குறிப்பாக முள்ளிக்குளம் மக்களின் காணிகள், அரச கட்டுப்பாட்டில் உள் ளமை குறித்து விரிவாக ஆராயப்பட் டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மன்னார் தீவு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நட வடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்தும் அவர்கள் சம்பந்தப்பட்ட நேரடியாக பார்வையிட்டனர்.









# சித்திரைக்கு பின் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்

## இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவிப்பு



எதிர்வரும் சித்திரை மாதத்திற்குப் பின்னர் மாகாணசபை தேர்தல் தொடர்பான சட்ட சீர்திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து உடனடியாக மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்துள்ளார் என்று மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மட்டக்களப்பிலுள்ள தந்தை செல்வா பூங்காவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தமிழர்களின் அரசியல் தீர்வு பற்றிய விடயத்தில் இன்னும் ஒரு தெளிவான நிலைப்பாட்டை ஜனாதிபதி கூறவில்லை எனவும் அதற்காக புதிய அரசாங்கம் கால அவகாசம் கோர முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.




# வடமராட்சியில் சைக்கிள்களைத் திருடி வந்த சந்தேக நபர் கைது; 12 சைக்கிள்களும் மீட்பு

யாழ்ப்பாணம் – வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் சைக்கிள்களைத் திருடிய நபரொருவர் நேற்றையதினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதானவரே காங்கேசன்துறை மாவட்ட பொலிஸ் குற்றதடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மு.உதயானந்த் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

களவுச் சம்பவமொன்று தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது பல்வேறு பகுதிகளிலும் சைக்கிள்களைத் திருடிய சம்பவங்களுடன் சந்தேக நபர் தொடர்புபட்டமை தெரிய வந்தது.

இதனையடுத்து சந்தேக நபர் வழங்கிய தகவலுக்கமைய 12 சைக்கிள்கள் மீட்கப்பட்டன.

கைதான சந்தேக நபரை கைப்பற்றப்பட்ட சைக்கிள்களுடன் நெல்லியடி பொலிஸார் ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு!

இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் மியோன் லீ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, இலங்கைக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் நல்லுறவைப் பேணிவருகின்றமைக்கு அந்த நாட்டின் தூதுவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நன்றி தெரிவித்தார் என அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தென் கொரிய அரசாங்கம் இலங்கையர்களுக்கு வழங்கியுள்ள வேலைவாய்ப்புக்கான ஒதுக்கீட்டை, மேலும் அதிகரிக்குமாறு அந்த நாட்டின் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.




# இறக்குமதி செய்யப்படவுள்ள பஸ்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குமாறு வலியுறுத்தல்

54 ஆசனங்களைக் கொண்ட பஸ் ஒன்றை இறக்குமதி செய்வதற்கு ஒரு கோடியே 70 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட வேண்டியுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போதுள்ள பஸ் கட்டணத்தின் அடிப்படையில், இறக்குமதி செய்யப்படும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது கடினமாகும்.

எனினும் தற்போதுள்ள பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என நாம் அரசாங்கத்தைக் கோரவில்லை.

அதற்கு மாறாக இறக்குமதி செய்யப்படவுள்ளபேருந்துகளுக்குவரிசலுகைகளை வழங்குமாறு எமது சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.”– என்றார்.

# அம்பேத்கர் குறித்த அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு தழுவிய போராட்டம்

## காங்கிரஸ் அறிவிப்பு




அம்பேத்கர் தொடர்பாக அமித் ஷா தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு நாடு தழுவிய போராட்டங்களை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இன்று முதல் 3 நாள்களுக்கு நாடு தழுவிய அளவில் நடைபெற உள்ள தொடர் நிகழ்ச்சிகள் குறித்த அறிவிப்பை காங்கிரஸ் வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

போராட்டம் தொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், காங்கிரஸ் உறுப்பினர்கள், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை அறிவிப்பை அனுப்பியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அம்பேத்கர் குறித்து அமித் ஷா தெரிவித்த கருத்துக்கள் தவறுதலாக வெளிவரவில்லை எனவும் தவறுதலாக கூறியிருந்தால் அவர் மன்னிப்புக் கேட்டிருப்பார் என்றும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது

ஆனால் இன்று வரை பா.ஜ.கவினர், அமித் ஷாவின் அந்தப் பேச்சுக்கு ஆதரவாக கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இது அவர்களின் உண்மையான நோக்கத்தை காட்டுகிறது எனவும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சமீபத்தில், மாநிலங்களவையில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா,

“அம்பேத்கர், அம்பேத்கர் என முழக்கமிடுவது இப்போது ஃபேஷன் ஆகிவிட்டது. இதற்கு பதிலாக, கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால், சொர்க்கத்திலாவது அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும். அம்பேத்கர் பெயரை மேலும் 100 முறைகூட உச்சரிக்கட்டும். ஆனால், அவரது உண்மையான உணர்வுகள் குறித்தும் அவர்கள் பேச வேண்டும்.” என்று பேசியிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# குவைத்துக்கு சென்ற மோடிக்கு விமான நிலையத்தில் வரவேற்பு









இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று குவைத்திற்கு விஜயம் மேற்கொண்டார்

40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் குவைத்துக்குச் செல்வது இதுவே முதல்முறையாகும்

குவைத் சென்றடைந்த பிரதமர் மோடிக்கு விமான நிலையத்தில் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டுள்ளது

குவைத் சென்றடைந்த பிரதமர் மோடியை, அந்நாட்டு விமான நிலையத்தில் துணைப் பிரதமர் மற்றும் பாதுகாப்புஅமைச்சர்ஷேக்பகத்யூசஃபவுத்அல்-சபா உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

குவைத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பழமைவாய்ந்த நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இந்த விஜயத்தின் போது கலந்துரையாடவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன

பிரதமர் மோடியின் இந்த விஜயத்தில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.





# கிறிஸ்மஸ் சந்தையில் மக்கள் கூட்டத்தின் மீது கார் மோதி விபத்து; பலி எண்ணிக்கை உயர்வு

ஜேர்மனியின் மாக்டெபர்க் நகரில் கிறிஸ்மஸ் சந்தையில் மக்கள் கூட்டத்தின் மீது மகிழுந்து மோதி விபத்துக்குள்ளானதில் பலியானவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



பலியானவர்களில் சிறுவன் ஒருவனும் அடங்குகின்றார் எனவும், 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

50 வயதான சவூதி அரேபிய வைத்தியர் ஒருவரே தனியாக காரை செலுத்தி இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளார் எனவும் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

## ஏமனில் இருந்து ஏவுகணை தாக்குதல்; இஸ்ரேலில் 16 பேர் காயமடைந்தனர்

ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை இஸ்ரேலின் டெல் அவிவ் அருகே விழுந்ததில் 16 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

வான்பாதுகாப்புஅமைப்புகளால் இந்த ஏவுகணையை இடைமறிக்க முடியாமற்போனதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் 77 பேர் கொல்லப்பட்டனர் என காஸாவின் சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமையன்று இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் சுமார் 25 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.





## உகாண்டாவை அச்சுறுத்தும் 'டிங்கா டிங்கா' வைரஸ்





கிழக்கு ஆப்பிரிக்க நாடான உகாண்டாவில் ஹடிங்கா டிங்கா' என்று பெயரிடப்பட்ட புதுவகை வைரஸ் பரவி வருவதாகவும், இது பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுமிகளை தாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக புண்டிபுக்யோ மாவட்டத்தில் சுமார் 300 இற்கும் மேற்பட்டோர் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அதிக படியான உடல் நடுக்கம் மற்றும் காய்ச்சல் என்பன இந்த நோய்த் தொன்றின் அறிகுறிகளாகும் எனவும் இது உடல் இயக்கத்தையும் கடுமையாக பாதிக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரசால் பாதிக்கப்பட்டோர் ஒருவார காலத்துக்குள் குணமடைந்து விடுகின்றனர் எனவும் புண்டிபுக்யோ மாவட்டத்தை தவிர வேறு எங்கும் நோய் பரவவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இரத்த மாதிரிகள் தற்போது பரிசோதிக்கப்பட்டு வருவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.12.2024




இன்று உற்சாகத்துடன் காணப்படு வீர்கள். இன்றைய நாளை நல்ல பலன் பெற பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கடின முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து முடிவெடுப் பீர்கள்.

நீங்கள் செய்யும் பணியை விரும்பி செய்வீர்கள். சுய வளர்ச்சி மூலம் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை விடக் கடின உழைப்பை நம்ப வேண்டும்.

உங்கள் துணையுடன் இன்றைய தினத்தைக் கொண் டாடு மகிழ்வீர்கள். இனிமையான வார்த்தைகளைப் பரமாறிக் கொள்வதன் மூலம் இருவரும் புரிந்துணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகையாக பண வரவு காணப்படும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக் காது. தீய விளைவுகளை தவிர்க்க நீங்கள் எந்த விடயத்தையும் தொடங்குமுன் யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தொடர்பும் சமூகமாக இருக்காது.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியாக அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் பேசும் போது கவன மாக இருக்க வேண்டும்.

இன்று ஏற்படும் செலவுகளை தவிர்க்க முடியாது. உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம்.




உங்கள் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் இன்று தடைகள் நிறைந்து காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலை இருந்த போதிலும் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் ஒருவிதமான வெறுமையை உணர்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. பணிகளை ஆற்றும் போது சில தாமதங்கள் ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் எரிச்சலை வெளிப்படுத்து வீர்கள். இந்த உணர்வை தவிர்த்து உங்கள் துணையை நகைச்சுவை உணர்வோடு அணுக வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக பணம் செலவாகும். நிதி சம்பந்தமாக எடுக்கும் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். நல்ல பலனைத் தராது.




இன்று ஆக்க பூர்வமான நாள். நபர்கள் மூலம் ஆதரவும் பலனும் பெறுவீர்கள். இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயற்றினில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர் கள். நல்ல தருணங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய மனிதர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

இன்று வரவுகள் அதிகமாக காணப்படும். சொத்துக்கள் வாங்குவதற்கு உங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர் கள். ஆற்றலும் உறுதியும் கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று மிதமான பலன்களே காணப படும். இன்று பொறுமையாக இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்வதன் மூலம் எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். எனவே திட்டமிட்டு அதன்படி பணிகளை ஆற்றி னால் வெற்றி காண இயலும்.

உங்கள் துணையுடனான உறவில் அகந்தைப் போக்கு காணப்படும். இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

சோம்பல் தனம் காரணமாக இன்று பண இழப்பு நேரலாம். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

பதற்றம் காரணமாக இன்று உங்களுக்கு கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காணப் புத்திசாலித் தனத்தைப் பயன் படுத்த வேண்டும். சூழ்நிலை கட்டுக் கடங்காமல் இருக்கும். எனவே சிந்தித்து செயல்பட வேண்டும்.

இன்று பணியிடத்தில் கவனமின்மை காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவன மாக செயற்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த அளவு இணக்கம் காணப்படும். தவறான புரிந்துணர்வு காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பெரிய அளவில் பண இழப்பு ஏற்பட வாய்ப் புள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும் என்பதால் இன்று பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

இன்று ஒவ்வாமை காரணமாக அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் மந்தமாகக் காணப்படும். உங்கள் நம்பிக்கைக்கு உயிர் கொடுங்கள். உங்கள் முயற்சிக ளில் வெற்றி பெற நம்பிக்கை முக்கியம்.

உங்கள் பணியில் ஏமாற்றமான சூழ்நிலைகள் காணப்படும். பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. இது உங்களுக்கு வருத் தத்தை அளிக்கும். நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு ஒருவருக்கொருவர் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் துணையிடம் பொறுமையையும் அன்பையும் வளர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் கவலைகள் ஏற்படும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று நன்மை தரும். உற்சாகமான அணுகுமறை மூலம் இன்றைய நாளை சிறப்பாக்கிக் கொள்ளலாம்.

சக பணியாளர்களின் ஆதரவு கிடைக் கும். உங்கள் மேலதிகாரிகளிடம் இருந்து எதிர்பாராத அனுகூலங்கள் கிடைக்கும். சாதித்த உணர்வு உங்க ளிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வை பகிர்ந்துகொள்வீர்கள். இது நல்ல புரிந்துணர்வு உருவாக வழி வகுக்கும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்குப் போது மானதாக இருக்கும். உங்கள் சேமிப்பையும் உருவாக்க முடியும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.12.2024

## தனுசு

இன்று சுமூகமான நாளாக இருக்கும். உறுதியான போக்கு உங்களை நல்ல முடிவு எடுக்க வைக்கும். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாள். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டு பெறுவீர்கள். புதிய வாய்ப்புகள் பெருகிக் காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு அதிகரிக்கும்.

உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலையில் இருப்பீர்கள். கணிசமான பணம் சம்பாதிக்க அதிர்ஷ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.

## மகரம்

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். இசையைக் கேட்பதன் மூலம் அமைதி பெறலாம். இது பிரச்சினைகளைக் கையாள உதவும். வாக்குவாதங்களில் இருந்து விலகி இருக்கவும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

உங்கள் பணியைக் கையாளும் போது கவனம் செலுத்த வேண்டும். இதனால் உங்கள் திறன் அதிகரிக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும்போது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவு பாதிக்கும். பேசும்போது கவனம் தேவை.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. அதிக பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவு.

## கும்பம்

இன்று நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். நல்ல பலன்களைக் காண நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியில் மிகுந்த தடைகளை எதிர்கொள்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டியது முக்கியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய போக்கை தவிர்த்து அமைதியாக இருப்பது நல்லது.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும்.

## மீனம்

இன்று பல நன்மைகள் நடக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனைத் தரும். சமூகத்தில் புதிய நபர்களின் தொடர்பு கிடைக்கும்.

உங்கள் திறமைகளை தனித்த அணுகுமுறை மூலம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்லுறவு வளரும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். ஊக்கத்தொகை போன்ற கூடுதல் பண வரவு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



